KTEJ 2024 01(2): 1- 14
Kolumpu Tamil E-Journal (KTEJ)
Volume 01, Issue II, 2024

# வாசிப்பை ஊக்குவிப்பதில் சம்மாந்துறை பொது நூலகங்களின் பங்கு: கொரோனாவிற்குப் பின்னரான ஒரு சமூகவியல் ஆய்வு

*[1]மாஜித் எம்.எச்.எம், [2]றிஸ்வி ஏ.எம்.ம், [3]சுஹூமி எம்.எஸ்*

*[1,2,3]இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்*

majidmhm9696@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

வாசிப்பு மனிதனை முழு மனிதனாக மாற்றுகின்றது, அந்த வகையில் நூலகங்கள் வாசிப்பை மேம்படுத்துவதிலும், ஊக்குவிப்பதிலும் மிகச் சிறந்த பங்களிப்பினை வழங்குபவையாக காணப்படுகின்றன. மேலும் பொது நூலகங்களானது பொது மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டவையாகும். எனினும் 2020ஆம் ஆண்டு இலங்கையில் கொரோனா பரவல் காரணமாக நூலகங்கள் உட்பட அனைத்துச் சேவைகளும் முடக்கப்பட்டன. இதனால் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியமையினாலும், வானொலி, தொலைக்காட்சி, கணனி போன்றவற்றின் பாவனை இன்று பெருமளவில் அதிகரித்துள்ளமையினாலும் வாசிப்புப் பழக்கம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நூல்கள், சஞ்சிகைகளை வாசிக்கும் பழக்கம் குன்றுமாயின் நமது சந்ததியினரின் எதிர்காலம் இருள்மயமாகிவிடும். இந்நிலையை மாற்றி வாசகர்கள் மத்தியில் வாசிப்பை ஊக்குவிக்கப் பொது நூலகங்கள் எவ்வாறான செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும். வாசகர்கள் மத்தியில் வாசிப்பை ஊக்குவிப்பதில் சம்மாந்துறைப் பொது நூலகங்களின் பங்களிப்பினைக் கண்டறிதல், எதிர்காலத்தில் வாசிப்பை ஊக்குவிக்க ஆலோசனைகளை முன்மொழிதல் ஆகிய இரு பிரதான நோக்கங்களை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்குச் சம்மாந்துறைப் பிரதேச சபைக்குட்பட்ட நான்கு பொது நூலகங்களும், வாசிப்பு நிலையமொன்றிலிருந்தும் ஏழு ஊழியர்கள் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இதில் முதலாம் நிலைத் தரவுகளாக வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானம், நேர்காணல் மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையக் கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றிலிருந்து தகவல்கள் பெறப்பட்டன. இவ்வாய்வின் தரவுகள் அனைத்தும் எம். எஸ். எக்ஸல் (MS Excel) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன. வாசிப்பில் பின்தங்கியுள்ள சமுதாயத்தை ஊக்குவிக்க சம்மாந்துறைப் பிரதேசத்திற்குட்பட்ட பொது நூலகங்கள் பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொண்டதால் வாசிப்பில் ஆர்வம் ஏற்பட்டுள்ளமையினையும், நூலகத்திற்குச் சமூகமளிக்கும் வாசகர்களின் எண்ணிக்கை முன்னரை விட அதிகரித்துள்ளமையினையும் இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. இவ்வாய்வானது பொது நூலகங்கள் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க துணைசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்:** *கொரோனா, பொது நூலகம், ஊக்குவித்தல், வாசிப்பு, சம்மாந்துறை*

## *Abstract*

*Reading significantly contributes to individual development, and in this context, libraries are considered crucial in fostering and promoting this skill. Public libraries are specifically established to serve the community. However, in 2020, due to the spread of COVID-19 in Sri Lanka, all services, including libraries, were temporarily suspended. Consequently, as students increasingly turned to technology for educational activities, the use of media such as radio, television, computers, etc., surged, significantly impacting reading habits. If the habit of reading books and magazines is disrupted, the future of our descendants may become challenging. The objective of this research is to find out the contribution of Sammanthura public libraries in promoting reading among the readers and to propose*

*suggestions to promote reading in the future. Seven employees from four public libraries and a reading center under Sammanthurai Pradeshiya Sabha were selected as samples. Primary data was collected through questionnaires, discussions, observations, and interviews, while secondary data was obtained from books, research articles, internet articles, magazines, newspapers, etc. All data analyses were performed using MS Excel. It has been observed that public libraries in the Sammanthurai area have implemented various projects to encourage reading within the underserved community. This has resulted in increased interest in reading, with a higher number of visitors to the library than before. The study is expected to contribute to the promotion of reading habits within Perth Libraries.*

***Keywords:*** *Corona, Public Library, Promoting, Reading, Sammanthurai.*

## 1. அறிமுகம்

வாசிப்பு மனிதனை முழு மனிதனாக மாற்றுகின்றது. "நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு" போன்ற பழமொழிகள் வாசிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்திலும் மனிதன் ஆறு அறிவுடையவனாகப் படைக்கப்பட்டுள்ளான். இதுவே மனிதனை வளர்ச்சியடையச் செய்துள்ளது. மனித அறிவில் வாசிப்பு முக்கிய இடம் வகிக்கின்றது (அமுதன், 2023).

மனிதன் கேட்ட, பார்த்த, வாசித்த, உணர்ந்த விடயங்களின் மூலம் பெற்ற அறிவினைப் பயன்படுத்தி மனிதன் தன்னுடைய செயல்களுக்கான யோசனைகளை பெறுகிறான். இங்கு மனிதன் பார்த்த, உணர்ந்த விடயங்களை விட வாசித்து அறிந்துகொண்ட விடயங்களே அதிகம், காரணம் அதிக விடயங்களை செவிமடுத்துக் கொண்டே இருக்க முடியாது. உலகில் நடைபெறும் அனைத்தையும் பார்க்கவும் முடியாது, மேலும் அனைத்து விடயங்களையும் உணரவும் முடியாது. ஆனால் வாசிப்பின் மூலம் அனைத்து விடயங்களையும் முழுமையாக அறிந்து கொள்ள முடியும். மனிதன் வாழ்நாள் முழுவதும் வாசித்து அறிவைப் பெருக்கிக் கொண்டே இருப்பான் (வெங்கடேஷ்வரன், 2017). ஒரு கல்லை உழி செதுக்கி, செதுக்கி அழகிய சிற்பமாய் மாற்றுவது போல புத்தகங்களை வாசிக்க வாசிக்க அவை மனிதனை பண்புள்ள மனிதர்களாக்கின்றன (அமுதன், 2023).

வாசிப்பை ஊக்குவிக்கும் மையங்களாக நூலகங்கள் (Library) காணப்படுகின்றன. லைப்ரரி-Library என்ற சொல்லானது 'லிபர்' என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து பிறந்தது. இது புத்தகத் தொகுதியைக் குறிக்கின்றது (முத்துசாமி, 1955). அந்த வகையில் நூலகங்கள் வாசிப்பை மேம்படுத்துவதிலும், ஊக்குவிப்பதிலும் மிகச் சிறந்த பங்களிப்பினை வழங்குபவையாகக் காணப்படுகின்றன (கலைவானி மற்றும் சன்முகதாசன், 2021). அது மட்டுமன்றி நூலகங்கள் நம் அறிவை வளர்த்திடும் அரும் பொக்கிஷங்கள் (துரைசிங்கம், 2015). பொது நூலகம் என்பது எதுவித பாகுபாடுமின்றி சமூகத்தின் அனைத்து மக்களுக்கும் உரித்தான ஒரு சமூக நிறுவனமாகும். கலாநிதி ரங்கநாதன் குறிப்பிடுகின்ற போது "பொது நூலகமானது புத்தங்களைச் சேகரித்து, அதனைப் பயன்படுத்துபவர்கள் அணுகவேண்டிய உரிய வழிமுறைகளையும் வழிகாட்டும் பொறுப்புடைய பொது நிறுவனமாகும்" (ரங்கநாதன், 1930).

யுனெஸ்கோ (UNESCO) அமைப்பு மற்றும் சர்வதேச நூலகச் சங்கப் பேரவையினது கருத்துப்படி "பொது நூலகங்களானது பொது மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டவையாகும். இவை இனம், தேசியம், வயது, பாலினம், மதம், மொழி போன்றவற்றுக்கு அப்பால் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சேவை செய்யும் சமூக நிலையங்களாகச் செயற்படுகின்றன. நூலகங்கள் ஆவணங்களைச் சேகரித்து அடுத்த சந்ததியினருக்கும் கையளிக்கின்றன. இச்செயற்பாட்டினால் சமூகத்தினுடைய கலாசார மையமாக திகழ்கின்றன" (IFLA/UNESCO, 2006).

ஒரு சமூகத்தின் அபிவிருத்தி அவற்றின் கலாசாரத்தில் தங்கியுள்ளது. இவை வளர்ச்சியடைய வேண்டுமாயின் சமுதாயத்தில் அறிவு வளர வேண்டும். வளர்ச்சியடைந்த சமூகமாக மாறவேண்டின் வாசித்தல் வேண்டும். இதற்காக பொது நூலகங்கள் இப்பணியை செய்கின்றன (பொற்செல்வி, 2016). அவ்வகையில் இவ்வாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சம்மாந்துறை பிரதேசத்தில் நான்கு பொது நூலகங்களும், இரண்டு வாசிப்பு நிலையங்களும் காணப்படுகின்றன. இவற்றுல் நூலகங்களாக முகைடீன் பொது நூலகம் (1978.10.04), மல்வத்தை பொது நூலகம் (1979.03.07), அமிர் அலி பொது நூலகம் (1983.10.09), எம். எச். எம். அஷ்ரப் பொது நூலகமும் (2006.06.17), வாசிப்பு நிலையங்களாக வீரமுனை வாசிப்பு நிலையமும் (2022.11.14), செந்நெல் கிராம வாசிப்பு நிலையமும் (2019.12.18) காணப்படுகின்றன. இவற்றுள் வீரமுனை வாசிப்பு நிலையம் தவிர்ந்த ஏனைய நான்கு பொது நூலகங்களும், வாசிப்பு நிலையமும் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இப் பொதுநூலகங்களுக்குப் பாடசாலை மாணவர்கள், பல்கலைகழக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனையோர்கள் என பலரும் புத்தகங்கள், நாவல்கள், கதைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகளை வாசிப்பதற்கும் ஏனைய கல்விசார் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் சமூகமளித்து வந்தனர். எனினும் 2020 ஆம் ஆண்டு இலங்கையில் கொரோனா பரவல் காரணமாக நூலகங்கள் உட்பட அனைத்துச் சேவைகளும் முடக்கப்பட்டன. இதனால் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியமையினால் வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. இந்நிலை தொடர்ந்தும் நீடிக்குமாயின் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவது கடினமாகிவிடும். எனவே வாசகர்களை நூலகத்துடன் தொடர்புபடுத்தி வாசிப்புப் பழக்கத்தை வழமையாக்கிக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவதுடன், வாசிப்புப் பழக்கத்தை மீண்டும் ஊக்குவிக்க சம்மாந்துறை பொது நூலகங்கள் எவ்வாறு பங்காற்றுகின்றன என்பதனை ஆராய இவ்வாய்வு முனைகிறது.

## 2. ஆய்வு நோக்கம்

1. வாசகர்கள் மத்தியில் வாசிப்பை ஊக்குவிப்பதில் சம்மாந்துறை பொது நூலகங்களின் பங்களிப்பினை கண்டறிதல்.
2. எதிர்காலத்தில் வாசிப்பை ஊக்குவிக்க ஆலோசனைகளை முன்மொழிதல்.

## 3. ஆய்வுப் பிரச்சினை

பொது நூலகங்கள் அறிவுத் தேடலையும் தகவல்களையும் வழங்கும் தகவல் மையங்களாக இயங்குகின்றன. இந் நூலகங்களைப் பயன்படுத்தும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டிருந்தாலும், கொவிட்-19 இற்குப் பின்னர் நூலகத்திற்கு வருகை தருபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமையினையும், வாசிப்புப் பழக்கம் அருகி வந்தமையினையும் காண முடிந்தது. அருகி வருகின்ற வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கும், அதிகரிப்பதற்கும் சம்மாந்துறைப் பொது நூலகங்கள் எவ்வாறான பங்களிப்பினை மேற்கொண்டுள்ளன? என்பதே ஆய்வுப் பிரச்சினையாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

## 4. ஆய்வு முக்கியத்துவம்

வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும், மனிதன் முழுமை பெற வேண்டுமெனில் வாசிப்பு அவசியமான ஒன்றாகும். வாசிப்பை ஊக்குவிக்கும் மையங்களாக நூலகங்கள் திகழ்கின்றன. ஆனால் கொவிட்-19 காலப்பகுதியில் பொது நூலகங்கள் உட்பட ஏனைய அனைத்துச் சேவைகளும் முடக்கப்பட்டன. இதனால் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியமையினால், நூலகங்களுக்குச் சென்று வாசிக்கும் பழக்கம் குறைந்துவிட்டது. தேவையான தகவல்களை மாத்திரம் இணையத்தளத்திலிருந்து பெற்றுக் கொள்கின்றனர். இதனால் வாசகர்களுக்கும் புத்தகங்களுக்குமிடையிலான தொடர்பு துண்டித்துக் காணப்படுகின்றது. இந்நிலை தொடர்ந்தும் நீடிக்குமாயின் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவது கடினமாகிவிடும். எனவே வாசகர்களை நூலகத்துடன் தொடர்புபடுத்தி வாசிப்புப் பழக்கத்தை வழமையாக்கிக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் சம்மாந்துறையில் காணப்படும் பொது நூலகங்கள்

வாசிப்பை ஊக்குவிக்க எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளன என்பதனை வெளிக்கொண்டுவர இவ்வாய்வு உதவியுள்ளது.

## 5. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது பண்புசார் மற்றும் அளவுசார் ஆய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம்நிலைத் தரவுகளாக வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானம், நேர்காணல் மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையக் கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மூலமும் பெறப்பட்டன.

## 6. இலக்கிய மீளாய்வு

கலைவாணி மற்றும் சண்முகதாசன் (2021). ஆகியோர் "வவுனியா பொது நூலகத்தின் செயற்பாடுகளும் அதன் சவால்களும்: ஓர் அளவை நிலை ஆய்வு" எனும் தலைப்பில் ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளனர். இவ் ஆய்வில் சமூகத்தில் மிகச் சிறந்த பங்களிப்பினை வழங்குபவையாக பொது நூலகங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் பொது நூலகம் தனது சேவைகளை மக்களுக்கு ஆற்றி வருகின்றது. இவ் ஆய்வின் முடிவாக நூலகச் செயற்பாடுகளில் பல சவால்களை நூலகம் எதிர்கொண்டது என்பதையும், பொதுமக்கள் தகவல் சேவையை பெறுவதில் திருப்தி இன்மையை கொண்டிருக்கின்றனர் என்பதையும், நூலக சவால்களை வெற்றிகொள்வதற்கான விதப்புரையும் முன்வைக்கப்பட்டுள்ளன.

சங்கமி (2020) என்பவர் "சமூக அபிவிருத்தியில் பொது நூலகங்களின் பங்கு: ஒரு தத்துவார்த்த கண்ணோட்டம்" (The Role of Public Libraries in Fostering Social Development: A Theoritical Perspective) எனும் தலைப்பில் ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளார். பொது நூலகங்களானது வாழ்நாள் பூராகவும் தனிநபர் தொடக்கம் சமூகக் குழுக்கள் வரை அனைவரும் கல்வி கற்று அறிவை பெருக்குவதற்கான முக்கிய தளங்களாக திகழ்கின்றன. இப்பொது நூலகங்கள் சாதி, மதம், பாலினம், வயது நிலை, கல்வித் தகைமை, பொருளாதார நிலை ஆகியவற்றுக்கு அப்பால் அனைவருக்கும் பயன்தரும் நோக்கில் இயங்கும் பொது நிறுவனங்களாகக் காணப்படுவதுடன் கல்வியறிவற்றவர்களையும் எழுத்தறிவுள்ளவர்களாக மாற்றக்கூடிய ஒன்றாகப் பொது நூலகங்கள் காணப்படுவதாக இவ்வாய்வு குறிப்பிடுகின்றது. ஆகவே சமூக அபிவிருத்தியில் பொது நூலகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன.

பாத்திமா பர்வின் மற்றும் பாத்திமா ஹிமாயா (2022) ஆகியோரால் "கிராமப்புற நூலகங்களும் அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளும்: வாழைச்சேனை பிரதேச நூலகங்களை மையப்படுத்திய ஆய்வு" எனும் தலைப்பில் ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளனர். இவ் ஆய்வில் நூலகங்கள் ஒரு சமூகத்தின் அறிவின் அடையாளமாகும். ஒரு நூலகத்தின் வளர்ச்சிக்கு அச்சமூக மக்களது அறிவின் தரம் மற்றும் அறிவுத் தேடலில் அவர்களுக்குள்ள ஆர்வம் என்பன கணக்கிடப்படுகின்றன. இவ் ஆய்வின் முடிவாக இக்கிராமத்திலுள்ள நூலகங்கள் எதிர்நோக்கும் இடர்கள் அடையாளம் காணப்பட்டு அதற்கான மாற்று வழிகளும் முன்வைக்கப்பட்டன.

ஸுனூமி, ஷிப்லி, மற்றும் அஸன் (2018) ஆகியோரால் "நூலகத்தை உபயோகிப்பதில் பல்கலைக்கழக மாணவர்களின் ஈடுபாடு: ஓர் மதிப்பீட்டாய்வு (இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு)" எனும் தலைப்பில் ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளனர். இவ் ஆய்வில் பொது நூலகங்கள் கற்றலுக்கான வசதிகளை போதியளவு கொண்டிருப்பினும் அதனை பயன்படுத்திப் பிரயோசனம் அடையாமல் மாணவர்கள் கவனயீனமாக உள்ளனர் என்பதனை இவ் ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது.

## 7. கலந்துரையாடல்

வாசிப்பு ஒருவனைப் பூரண மனிதனாக்குகிறது என்பது அறிஞர் தம் வாக்கு. கல்வியில் உயர்ந்த பேரறிஞர்கள் பலர் தம் வாசிப்புப் பழக்கத்தினாலேயே வாழ்வில் உயர்வடைந்தனர். வாசிப்புப் பழக்கம் ஒருவனது உளநலத்தையும் உடல்நலத்தையும் மட்டுமன்றி ஆன்ம நலத்தையும் பேண

வழிவகுக்கிறது. அறிவைப்பெற, மன அமைதிபெற, புதியன காண வாசிப்புப் பழக்கம் பெரிதும் உதவுகிறது.

இன்று வாசிப்புப் பழக்கம் பெரிதும் குன்றி வருகிறது. தொலைக்காட்சி, வானொலி, இணையத்தளங்கள் இவற்றைப் பயன்படுத்துவதிலேயே மக்களின் கவனம் திரும்பியுள்ளது. இதன் காரணமாக நூல்கள், சஞ்சிகைகளை வாசிக்கும் பழக்கம் மக்களிடையே பெரிதும் குறைந்து வருவதைக் காணமுடிகிறது. ‘‘கண்டது கற்கப் பண்டிதனாவான்” என்று முன்னோர் வாக்கு. காணும் நூல்களையெல்லாம் கற்பதன் மூலம் ஒருவனது அறிவு பன்மடங்கு பெருகும் என்ற கருத்தையே இப்பழமொழி உணர்த்துகிறது.

‘‘தொட்டனைத்து ஊறும் மணற் கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு” என்கிறார் வள்ளுவர். மணற்கேணியைத் தோண்டத்தோண்ட நீர் ஊற்றெடுப்பது போல மனிதர்கள் நூல்களைக் கற்கக் கற்க அவர்கள் தம் அறிவு பெருகும் என்பது இக்குறள் தரும் கருத்தாகும். அறிவு பெருக வேண்டுமாயின் நூல்களை வாசிக்கும் பழக்கம் வளரவேண்டும். இக்காலத்தில் வாசிக்கும் பழக்கம் குன்றி வருவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன (துரைசிங்கம், 2015).

வானொலி, தொலைக்காட்சி, கணனி போன்றவற்றின் பாவனை இன்று பெருமளவில் அதிகரித்துள்ளது. குக்கிராமங்களிலும் குடிசைகளிலும் இவற்றின் ஆதிக்கம் பெருகியுள்ளது. இதன் காரணமாக வாசிப்புப் பழக்கம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நூல்கள், சஞ்சிகைகள் என்பனவற்றை வாசிக்கும் பழக்கம் குன்றுமாயின் நமது சந்ததியினரின் எதிர்காலம் இருள்மயமாகிவிடும் என்றே கூறவேண்டும். மனிதன் வாழக் கற்கவேண்டும். இன்று மனிதன் வாழும்வரை கற்க வேண்டும் என்ற கோட்பாடு எழுந்துள்ளது. கருவறை முதல் கல்லறை வரை கல்வி தொடர வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றுள்ளது. இதனை நன்குணர்வோர் வாசிப்பில் தீவிர கவனம் செலுத்துவர் (துரைசிங்கம், 2015).

‘‘கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே” என்று கூறுகிறது வெற்றி வேட்கை. வாசிப்பதன் அவசியத்தையே இது வலியுறுத்துகிறது. வாசிப்பதால் நாம் பல புதிய விடயங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டுகிறது. “நல்ல நல்ல நூல்களே நமது நல்ல நண்பர்கள்’’ நல்ல நூல்களை நமது நண்பர்களாக்கிக் கொண்டால் நமது வாழ்வு உயர்வது திண்ணம். வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதால் நாம் பல பயன்களைப் பெறமுடிகிறது. ஓய்வு நேரங்களை வாசிப்பதில் பயன்படுத்துவதால் நமது அறிவு பெருகுகிறது. புதிய புதிய விடயங்களை அறிந்துகொள்ள முடிகிறது. “அறிவு அற்றங்காக்கும் கருவியாகும்’’ அறிவைப் பெருக்கிட நூல்களை நாம் துணைக்கொள்ள வேண்டும் (துரைசிங்கம், 2015).


வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளப் பல உத்திகள் கையாளப்படுகின்றன. புத்தகக் கண்காட்சி நடாத்துதல், வாசிப்பு மாத நிகழ்ச்சிகளை நடாத்துதல், நூலக தினம் கொண்டாடுதல் போன்றன அவற்றுள் சிலவாகும். நூலகங்கள் நம் அறிவை வளர்த்திடும் அரும் பொக்கிஷங்கள் அங்கு தினந்தோறும் சென்று வாசகர்கள் விரும்பிடும் நூல்களைப் பெற்று வாசிக்க முடியும். நூலகங்களில் காலத்துக்குக் காலம் வெளிவரும் புத்தம் புதிய நூல்களை வாசிப்பதால் நவீன இலக்கியச் செல்நெறிகளை வாசகர்களால் அறிந்துகொள்ளமுடிகிறது (துரைசிங்கம், 2015).

## 7.1 வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதில் சம்மாந்துறை பொது நூலகங்கள்

வாசிப்பை ஊக்குவிப்பதில் சம்மாந்துறை பொது நூலகங்களின் பங்கினைக் கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பின்வரும் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

**நூலகத்தை அதிகம் உபயோகிப்பவர்கள்**

நூலகத்தை உபயோகிப்பவர்களில் 86% வீதமானவர்கள் பாடசாலை மாணவர்களும், 14% வீதமானவர்கள் ஏனையோர்களுமாக காணப்படுவதை உரு (1) காட்டுகின்றது





உரு 1: நூலகத்தை அதிகம் உபயோகிப்பவர்கள்

மூலம்: நூலகர் வினாக்கொத்து

**வாசகர்கள் நூலகத்திற்குச் சமூகமளிப்பதற்கான நோக்கம்**

நூலகத்திற்கு வருகை தருவோரில் 72% சதவீதமான பாடசாலை மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளவும், 14% சதவீதமானவர்கள் புத்தகம் வாசிக்கும் நோக்கிலும், மேலும் 14% சதவீதமானவர்கள் பத்திரிகை வாசிக்கும் நோகக்கிலும் நூலகத்திற்கு வருகை தருகின்றமையினை உரு (2) காட்டுகின்றது.





உரு 2: வாசகர்கள் நூலகத்திற்குச் சமூகமளிப்பதற்கான நோக்கம்

மூலம்: நூலகர் வினாக்கொத்து

**கொரோனா காலப்பகுதியில் நூலகத்திற்குச் சமூகமளிக்கும் வாசகர்களின் எண்ணிக்கை**

கொரோனா காலப்பகுதியில் நூலகத்திற்கு சமூகமளிக்கும் வாசகர்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டதை 71% வீதமான நூலகர்கள் முழுமையாக எற்றுக்கொண்டதுடன், 29% வீதமானவர்கள் ஏற்றுக்கொண்டனர். நூலக ஊழியர்களின் கருத்துப் பிரகாரம் கொரோனா காலப்பகுதியிலும், அதனை அண்மித்த காலப்பகுதியிலும் நூலகத்திற்குச் சமூகமளித்த வாசகர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டதில் 100% வீதமானோர் ஏற்றுக்கொண்டதை உரு (3) காட்டுகின்றது.





உரு 3: கொரோனா காலப்பகுதியில் நூலகத்திற்குச் சமூகமளிக்கும் வாசகர்களின் எண்ணிக்கை

மூலம்: நூலகர் வினாக்கொத்து

**கொரோனா காலப்பகுதியிலும், அதனை அண்மித்த காலப்பகுதியிலும் ஒவ்வொரு நாளும் நூலகத்திற்கு சமூகமளித்த வாசகர்களின் எண்ணிக்கை.**

நூலக ஊழியர்களிடம் இவ்வினா தொடுக்கப்பட்ட போது கொரோனா காலப்பகுதியிலும், அதனை அண்மித்த காலப்பகுதியிலும் ஒவ்வொரு நாளும் 10 தொடக்கம் 20 வரையான வாசகர்கள் சமூகமளித்ததாக 29% வீதமானவர்களும், 20 தொடக்கம் 30 வரையான வாசகர்கள் சமூகமளித்ததாக 71% வீதமானவர்களுமாக தெரிவித்ததை உரு (4) காட்டுகின்றது.





உரு 4: கொரோனா காலப்பகுதியிலும், அதனை அண்மித்த காலப்பகுதியிலும் ஒவ்வொரு நாளும் நூலகத்திற்கு சமூகமளித்த வாசகர்களின் எண்ணிக்கை.

மூலம்: நூலகர் வினாக்கொத்து

கொரோனா காலப்பகுதியிலும் அதனை அண்மித்த காலப்பகுதியிலும் நூலகத்திற்கு சமூகமளித்த வாசகர்களின் எண்ணிக்கை குறைந்தமைக்காண காரணங்களாக, கொரோனா காரணமாக நூலகங்கள் மூடப்பட்டதனால் வாசகர்கள் இணையத்தளத்தில் நூற்களையும், பத்திரிகைகளையும் பெற்றுக்கொள்ளப் பழகிவிட்டதாக 86% சதவீதமானவர்களும், ஏனைய காரணங்களை 14% சதவீதமானவர்களும் தெரிவித்தனர;.

**நூலகத்திற்கு வருகை தரும் வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தமை.**

பொது நூலக ஊழியர்களிடம் இவ்வினா தொடுக்கப்பட்ட போது 100% வீதமானவர்கள் கொரோனா காலப்பகுதியிலும், அதனை அண்மித்த காலப்பகுதியிலும் நூலகத்திற்கு வருகை தரும் வாசகர்களின் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டதால், அதனை அதிகரிப்பதற்கான செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தமையினை உரு (5) காட்டுகின்றது.





உரு 5: நூலகத்திற்கு வருகை தரும் வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தமை.

மூலம்: நூலகர் வினாக்கொத்து

**இச் செயற்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்களின் பின்னர் நூலகத்திற்கு சமூகமளிக்கும் வாசகர்களின் வீதம்**

இச் செயற்திட்டங்களின் பின்னர் நூலகத்திற்கு சமூகமளிக்கும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையினை உரு (6) விவரிக்கின்றது.




உரு 6: செயற்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்களின் பின்னர் நூலகத்திற்கு சமூகமளிக்கும் வாசகர்களின் வீதம்

மூலம்: நூலகர் வினாக்கொத்து

இவ்வுருவின் படி நூலகத்திற்கு சமூகமளிக்கும் வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களால் 5 தொடக்கம் 10 வரையான மேலதிக வாசகர்கள் அதிகரித்துள்ளதாக 14% வீதமான ஊழியர்களும், 15 தொடக்கம் 25 வரையான மேலதிக வாசகர்கள் அதிகரித்துள்ளதாக 57% வீதமான ஊழியர்களும், 25 தொடக்கம் 35 வரையான மேலதிக வாசகர்கள் அதிகரித்துள்ளதாக 29% வீதமான ஊழியர்களும் தெரிவித்தனர்.

## 7.2 வாசிப்பை ஊக்குவிக்க சம்மாந்துறை பொது நூலகங்கள் மேற்கொண்ட செயற்திட்டங்கள்

வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும். மனிதன் முழுமை பெற வேண்டுமெனில் வாசிப்பு அவசியமான ஒன்றாகும். வாசிப்பை ஊக்குவிக்கும் மையங்களாக நூலகங்கள் திகழ்கின்றன. ஆனால் கொவிட்-19 காலப்பகுதியில் பொது நூலகங்கள் உட்பட ஏனைய அனைத்துச் சேவைகளும் முடக்கப்பட்டன. இதனால் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள தொழிநுட்பங்களை பயன்படுத்தியமையினால் நூலகங்கள் சென்று வாசிக்கும் பழக்கம் குறைந்துவிட்டது. தேவையான தகவல்களை மாத்திரம் இணையத்தளத்திலிருந்து பெற்றுக் கொள்கின்றனர். இதனால் வாசகர்களுக்கும் புத்தகங்களுக்குமிடையிலான தொடர்பு துண்டித்துக் காணப்படுகின்றது. இந்நிலை தொடர்ந்தும் நீடிக்குமாயின் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவது கடினமாகிவிடும். எனவே வாசிப்பை ஊக்குவிக்க சம்மாந்துறை பொது நூலகங்கள் பின்வரும் வேலைத் திட்டங்களை மேற்கொண்டமையினை அறிய முடிந்தது.

1. **புத்தகக் கண்காட்சிகளை நடாத்துதல்**: புத்தகக் கண்காட்சிகளை நடத்துவதால் அவற்றைப் பார்வையிட வருவோரின் உள்ளங்களில் ஒருவித ஆர்வம் உண்டாகிறது. நல்ல நல்ல நூல்களை வாங்கிப் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் தூண்டப்படுகிறது. காலத்துக்குக் காலம் வெளிவரும் புதிய நூல்களைக் காணும் வாய்ப்பும் கிட்டுகிறது.
2. **நூலக தினம் கொண்டாடப்படுதல்**: வருடாந்தம் ஆகஸ்ட் 12ஆம் திகதி தேசிய நூலக தினத்தை நினைவுகூர்ந்து, அன்றைய தினத்தில் நூலகத்தின் தேவை, அதன் பயன்பாடு, அதனால் பெறும் நன்மைகள் என்பன குறித்து மக்கள் அறிந்து கொள்ளத் தூண்டுதல் அளிக்கப்படுகிறது.
3. **தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள்:** தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வாசிப்புப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒக்டோபர் மாதத்தில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை வருடாந்தம் ஏற்பாடு செய்தல்.
4. **காலைக் கூட்ட விழிப்பூட்டல்களை மேற்கொள்ளல்**: வாசிப்பை ஊக்குவிக்கும் முகமாகப் பாடசாலைக் காலை கூட்டத்தில் (Assembly) மாணவர்களிடையே வாசிப்புத் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்கி மாணவர்களை ஊக்கப்படுத்துதல்.
5. **சிறந்த வாசகரை இனங்கண்டு ஊக்குவித்தல்**: சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை நூலகத்துடன் தொடர்பைப் பேணி வாசிப்பில் அதிக ஈடுபாடுடையவர்களை இனங்கண்டு அவர்களைக் கௌரவிக்கும் முகமாகப் பொன்னாடை போர்த்திப் பரிசில்களை வழங்கி வாசிப்பில் ஊக்கப்படுத்துதல்.
6. **போட்டி நிகழ்ச்சிகளை நடாத்துதல்**: வாசிப்பை ஊக்குவிப்பதற்காக மாணவர்கள் மத்தியில் சித்திரம், கட்டுரை, பேச்சு, பொது அறிவுப் போட்டிகளை நடாத்திப் பரிசில்களை வழங்கி மாணவர்களைக் கௌரவித்தல்.
7. **பஸ் தரிப்பிட நூலகம்**: பஸ் தரிப்பிடங்களில் பத்திரிகைகள், புத்தகங்களை வைத்து அங்கு வரும் பிரயாணிகளுக்கு மத்தியில் வாசிப்பை மேம்படுத்த பஸ் தரிப்பிட நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.
8. **வீட்டுக்கு ஒரு நூலகத் திட்டம்**: சிறார்கள் மத்தியில் வாசிப்பை ஊக்குவிப்பதற்காக வீட்டிற்கு ஒரு நூலகம் என்ற தொனிப் பொருளில் வீட்டில் நூலகத்தை உருவாக்கி அதிக நூல்களைக்

கொண்ட வீடுகளை அடையாளப்படுத்தி அவர்களைக் கௌரவித்துப் பரிசில்களை வழங்குதல்.

9. **வாசிப்பினை ஊக்குவிக்கும் துண்டுப்பிரசுரங்களைப் பகிர்தல்**: வாசிப்பை ஊக்குவிப்பதற்காகத் துண்டு பிரசுரங்கள், விழிப்புணர்வுப் பதாதைகள் மற்றும் கருத்துக்களை மக்கள் மத்தியில் காட்சிப்படுத்தி வாசிப்பின் பக்கம் மக்களைத் தூண்டுதல்.
10. **வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையிலான தகவல்களைச் சமூக வலைத்தளங்கள் ஊடாகப் பகிருதல்** : வாசகர்கள் நூலகத்திற்குச் சென்று வாசிப்புப் பழக்கத்தை வழமையாக்கிக் கொள்ளும் வகையில் பொது நூலகத்தின் செயற்பாடுகளை முகநூல் பக்கத்திலும், ஏனைய சமூக வலைத்தளங்களிலும் பகிர்தல்.
11. **நூலகங்களுக்கு இடையிலான புத்தகப் பொதிப் பரிமாற்றம்**: பொது நூலகமொன்றில் காணப்படாத புத்தகத்தை இன்னொரு நூலகத்திலிருந்து ஒரு மாத காலத்திற்கு இரவலாக மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்து அவர்களின் வாசிப்பை மேம்படுத்தல்.
12. **கதை சொல்லும் நேரம்** : பாலர் பாடசாலை சிறார்கள் மத்தியில் வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் "கதை சொல்லும் நேரம்" எனும் தொனிப்பொருளில் திறமையான ஆசிரியர்களின் மூலம் கதைகளைத் திரையில் காட்சிப்படுத்திச் சிறார்கள் இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையில் இடை இடையே நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.
13. **இலவச அங்கத்துவம்**: மாணவர்களை நூலகங்கலோடு தொடர்புபடுத்த வாசிப்பு மாதத்தில் இலவச அங்கத்துவத்தை வழங்கி, அவர்களுக்கு மத்தியில் வாசிப்பை ஊக்குவித்தல்.
14. **இணையவழி கற்கைப் பிரிவு**: வாசகர்களிடையே வாசிப்பை மேம்படுத்தும் முகமாக நூலகங்களில் கிடைக்கப்பெறாத நூல்களை, தகவல்களை இணையதளத்தளத்தினூடாக இலவசமாகப் பெற்றுக் கொள்ளக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளமை.
15. **நடமாடும் நூலகம்:** கொரோனா பரவல் காரணமாக நுலகத்திற்குச் சமூகமளிக்கும் வாசகர்ளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தமையினால் வாசிப்புத் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் அவர்களது காலடிக்கே சென்று புத்தகங்களை இரவலாகக் கொடுத்து வாசிப்பை ஊக்குவித்தமை.

## 8. முடிவுரையும் பரிந்துரையும்

### முடிவுரை

வாசிப்பு மனிதனை முழு மனிதனாக மாற்றுகின்றது. அந்த வகையில் நூலகங்கள் வாசிப்பை மேம்படுத்துவதிலும், ஊக்குவிப்பதிலும் மிகச் சிறந்த பங்களிப்பினை வழங்குபவையாக காணப்படுகின்றன. மேலும் பொது நூலகங்களானது பொது மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டவையாகும். இவை இனம், தேசியம், வயது, பாலினம், மதம், மொழி போன்றவற்றுக்கு அப்பால் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சேவை செய்யும் சமூக நிலையங்களாக செயற்படுகின்றன. எனினும் 2020 ஆம் ஆண்டு இலங்கையில் கொரோனா பரவல் காரணமாக நூலகங்கள் உட்பட அனைத்துச் சேவைகளும் முடக்கப்பட்டன. இதனால் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியமையினால் வாசிப்புப் பழக்கம் அருகி வந்ததுடன் கொரோனாக் காலப்பகுதியிலும், அதனை அண்மித்த காலப்பகுதியிலும் ஒவ்வொரு நாளும் 10 தொடக்கம் 30 வரையான வாசகர்களே சம்மாந்துறை பொது நூலகங்களுக்குச் சமூகமளித்தனர்.

இவ்வாறு நூல்கள், சஞ்சிகைகள் என்பனவற்றை வாசிக்கும் பழக்கம் குன்றுமாயின் நமது சந்ததியினரின் எதிர்காலம் இருள்மயமாகிவிடும். இந் நிலைமையை இல்லாதொழித்து, வாசகர்களிடையே வாசிப்பை ஊக்குவிக்கச் சம்மாந்துறை பொது நூலகங்கள் பல்வேறு செயற்திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் ஏற்பாடு செய்ததனால் வாசகர்களிடையே வாசிப்பில் ஆர்வம் ஏற்பட்டுள்ளதுடன், நூலகத்திற்குச் சமூகமளிக்கும் வாசகர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளமையும் இவ்வாய்வின் மூலம் கண்டறிய முடிந்தது.

**பரிந்துரை**

**வாசிப்பு வட்டம்:**

வாசிப்பு வட்டம் என்னும்போது பொதுத் துறைகளில் ஆர்வமுள்ளோரை ஒன்று சேர்த்து அவர்களுக்கென வாசிப்பு வட்டங்களை உருவாக்குதல் வேண்டும். வாசிப்பு வட்டங்களுக்குத் தேவையான நூல்களையும் வாசிப்பு வட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கான இடத்தையும் தேர்ந்தெடுத்து வாசிப்பு வட்டங்கள் சிறப்பான முறையில் நடைபெற வழிவகுக்க வேண்டும். வாராந்த, மாதாந்த ரீதியில் நடைபெறும் இத்தகைய கருத்தூட்டல்களுக்கு உதவுமுகமாக நூலகங்கள் தமக்கென சிறியளவிலாவது கருத்தரங்கு மண்டபம் ஒன்றையும் கொண்டிருக்குமாயின் வாசிப்பு வட்டம் நடைபெறுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பேயே அவற்றுடன் தொடர்பான நூல்களை அம் மண்டபத்தின் ஒரு பகுதியிலேயே காட்சிப்படுத்தின் வாசகர்களுக்கு இலகுவாக இருக்கும்.

**கல்வியறிவற்றோருக்கான வாசிப்பு**

அபிவிருத்தியடைந்து வரும் பெரும்பாலான நாடுகளில் கல்வியறிவற்றோரின் தொகை அதிகமாக இருப்பது மட்டுமன்றி இவர்கள் பொருளாதார, சமூக, கலாசார ரீதியில் மிகவும் பின் தங்கியோராக இருப்பதை இனங்காண முடிகின்றது. இவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி ஏனையோரைப போன்று இவர்களையும் சமூகத்தின் மேல் நிலைக்குக் கொண்டு வர வேண்டிய பணி பொது நூலகங்களையே சாரும். இச் சேவையின் மூலம் கல்வியறிவற்றோரும் கல்வி பெற, தகவலைப் பெற, பொழுது போக்க, அகத் தூண்டலுக்கு உதவ, மீளுருவாக்கத்திற்கு உதவ முடியும். இச் சேவையின் மூலம் மிகச் சிலராவது எழுதவும் படிக்கவும் தூண்டப்படக் கூடும். அவ்வாறு அவர்கள் தூண்டப்பட்டுக் கல்வியறிவு ஊட்டப்பட்டவர்களாக மாறிய பின்னர் அவர்களை மேலும் ஊக்குவிக்க வழிகாட்டலாம். இளமையிற் கல்வி சிலையில் எழுத்துப் போன்று முதுமையில் கல்வி விட்டால் போச்சு என்ற நிலை உருவாக விடாது மேலும் மேலும் முதியோர்க்கான வழிகாட்டல் உதவியை மேற்கொள்ளுதல் அவசியமாகும்.

**கலாசார நிகழ்வுகள்**

மக்களை ஈர்க்கக்கூடிய முயற்சிகளில் ஒன்றாகக் கலாசார நிகழ்ச்சிகளை ஒழுங்கமைக்க வேண்டும். நாடகம், திரைக்காட்சி போன்றவற்றை ஒழுங்கு செய்து சமூகத்தின் அனைத்து அங்கத்தவர்களையும் பங்குபற்றச் செய்தல் வேண்டும். நூலகப் பக்கமே திரும்பிப் பார்க்காத ஒருவரைத் தன்னும் நூலகத்திற்குச் சமூகமளிக்கச் செய்து நாம் வெற்றியடைவோமானால் அது நூலகத் தொழிலுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

**குற்றமிழைக்கும் சிறாார்களுக்கு வாசிப்பையே தண்டனையாக வழங்குதல்**

மாணவர்கள், சிறார்கள் குற்றமிழைக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்களிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் புத்தங்களை வாசிப்பதனை தண்டனையாகக் கொடுப்பதற்குப் பொது நூலகங்கள் பாடசாலை நிர்வாகிகளுக்கு அறிவுரை வழங்குதல்.

**உசாத்துணைகள்**

Alumutairi, Nouf Rashdan. (2018). *Effective Reading Strategies for increasing the Reading Comprehension Level of Third – Grade Students with Learning Disabilities*. Dissertations, Western Michigan University. https://scholarworks.wmich.edu/dissertations/3247

Edeole, I. M., & Adejoke, A. M. (2016). Promoting Reading Habit among Secondary School Students in Lagos State: The Role of Library & ICT. *Asian Journal of Education and e-Learning (ISSN: 2321–2454), 4*(05).

Farwin, M.F., Himaya, M.L.F. (2022). fpuhkg;Gw E}yfq;fSk; mit vjpu;Nehf;Fk; gpur;rpidfSk;: thior;Nrid gpuNjr E}yfq;fis ikag;gLj;jpa Ma;T. A paper presented at the 11th South Eastern University International Arts Research Symposium, South Eastern University of Sri Lanka.

Gunasekara, chamani. (2010). Students' usage of an academic library: a user survey conducted at the main library university of peradeniya. *Journal of the University librarians' accociation of Sri Lanka.*

Hulya, Kucukoglu. (2012). Improving reading skills through effective reading strategies, Akdeniz Language Studies Conference 2012, Hacettepe University, Turkey.

Habibu, I., Ejembi, S. (2011). The role of schools and public libraries in promoting reading habit among children and adolescents in Nigeria. *In Information and knowledge management*, *1* (4).

Harrison, K.C. (1960). *First steps in Librarianship*. London: Crafton.

Jamil, Halimah. (2017). Comparison of Oral Assessment Aspects of KBSM Descriptors with Learning Standards in Secondary Curriculum Standards (KSSM). *International Journal of Education and Training: Universiti Putra Malaysia.*

Kalaivani, S., Shanmuhathasan, S. (2021). Activities of Vavuniya Public Library and its Challenges: A survey Research. *Sri Lanka Library Review, 35*(2).

Kaliappan, Y., Kolandan, S., & Selvaraj, R. (2022). Improving reading skills through effective reading strategies. *Journal of Valartamil*, *3*(2), 23–33. https://doi.org/10.37134/jvt.vol3.2.3.2022

Mahendran, M. & Kalyani, V. (2018). Motivating ESL Learners of Low Proficiency In eading Through an Extensive Reading Programme. *Muallim Journal of Social Sciences and Humanities*, *2* (3) (177-184.) https://misshonline.com/index.php/journal/article/view/61/56

Mittal, R.L. (1983). *Library administration.Theory and practice*. New Delhi: Metropolitan book.

Nijumoni Changmai. (2020). THE ROLE OF PUBLIC LIBRARIES IN FOSTERING SOCIAL DEVELOPMENT: A THEORETICAL PERSPECTIVE. *PalArch's Journal of Archaeology of Egypt / Egyptology*, *17*(7), 12209-12214. https://archives.palarch.nl/index.php/jae/article/view/4696

Senevirathna, Daisy. (2006). measuring user satisfaction: a case study at the PGIM branch library at Peradeniya. *Journal of the University librarians association of Sri Lanka*.

Sivathasan, N. (2013). Impact of library collections on user satisfaction: a case study. *European journal of business and management*.

Shera, Jesse.H. (1976). *Introduction to Library Science: Basic elements of Library science*. Littletone: Libraries unlimited.

Zunoomy, M.S., Shibly, F.H.A., Asan, A.P.M. (2018). Involvement of University Students in using library: an evaluative study based on South Eastern University of Sri Lanka. A paper presented at the 5th International Symposium, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.

துரைசிங்கம், த. (2015). *கட்டுரைக் கலஞ்சியம்.* கொழும்பு: லங்கா புத்தகசாலை.

தமிழ் கட்டுரைகள். (2023). *வாசிப்பின் முக்கியத்துவம்.* Retrieved from: tamilkatturai.com

மைதிலி விசாகரூபன். (2005). *இலங்கையில் நூலகச்சட்டங்கள்.* யாழ்ப்பானம்: மலர் பதிப்பகம்.

பெருமாள், பா. (2002). *உலக நூலகங்கள்.* சென்னை: மணிபாசகர் பதிப்பகம்.

விவேகானந்தன், வை. (2005). *அறிவுலக சொத்துரிமைச்சட்டமும் உலகமயமாதலில் நூலக தகவல் விஞ்ஞான அபிவிருத்தியும்.* கொழும்பு: டெக்னோ பிறின்டிங்.

செல்வராஜா, N. (2023, May 14). வாசிப்பின் வலிமை. *Virakesari illustrated weekly Sunday.*

பொற்செல்வி, S. (2016, October, 12). சமூக மேம்பாட்டில் பொது நூலகங்களின் பங்களிப்பு. *Virakesari.*

**Those who were interviewed:**

Jawffer, AK. Librarian, Mohideen Public Library, Sammanthurai. (19. 05. 2023).

Jawfer, ALM. Library Assistant, Amir Ali Public Library, Sammanthurai. (19. 05. 2023).

Saseena, ARF. Library Assistant, Amir Ali Public Library, Sammanthurai. (19. 05. 2023).

Sukri, SLA. Library Assistant, MHM Ashraf Public Library, Sammanthurai. (19. 05. 2023).

Imran, ABM. Library Assistant, Mohideen Public Library, Sammanthurai. (12. 12. 2023).

Baseem, MACM. Library Assistant, Mohideen Public Library, Sammanthurai. (12. 12. 2023).

Amsa, ABM. Library in charge, Veeramunai Reading Center, Sammanthurai. (20. 12. 2023).

Ilyas, ARM. Librarian, Amir Ali Public Library, Sammanthurai. (21. 12. 2023).

Kamal, T. Library Assistant, Malwattai Public Library, Sammanthurai. (21. 12. 2023).

Nowshad, S.M. Librarian, Sennal Giramam Reading Center, Sammanthurai. (24.12.2023).